[1974 சனவரி 24

Kerosene, etc., seized in Madras

* 147 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that large stocks of petrol and kerosene were seized from unauthorised salesmen in Madras around 17th February 1973; and

(b) if so the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) 13—2—1973 அன்று சென்னை மாநகரின் நான்கு வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் திடீர்ச் சோதனைகள் நடத்தப்பட்டன. அச் சோதனைகளின்போது மொத்தம் 3,675 லிட்டர் மண்ணெண்ணெய், 287 லிட்டர் பெட்ரோல், 125 லிட்டர் டீசல் எண்ணெய், 55 லிட்டர் எஞ்சின் எண்ணெய் ஆகியவை கைப்பற்றப்பட்டன. காவலர்களால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

மதுரை பால் பண்ணை

* 148 **வினு.—திரு. த. சோனையா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பால்பண்ணைக்கு எந்தெந்த மாவட்டங்களிலிருந்து, எத்தனை சங்கங்களிலிருந்து பால் வருகிறது?

(இ) மதுரை பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் வருகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) மதுரை பால் பண்ணைக்கு மதுரை மாவட்டத்தில் 171 சங்கங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 53 சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 18 சங்கங்களும் பால் வழங்குகின்றன.

(இ) இப்பால் பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு 23,099 லிட்டர் பால் வருகிறது.

திரு. த. சோனையா : கிராமங்களிலிருந்து பால் பண்ணைகள், மதுரை போன்ற நகரங்களுக்கு எல்லா பாலையும் கொண்டு போய் விடுகிற காரணத்தால், கிராமங்களில் பால் கிடைப்பதில்லை.